***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 318/2021 – P.W.1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | திருநாவுக்கரசு |
| *Father/Husband's Name* | கோவிந்தசாமி |
| *Village* | ஆதிச்சபுரம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *64* |

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 14.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சண்முகம் எனது உறவுக்காரர்.

2. கடந்த 07.09.2020 ம் தேதியன்று மாலை சுமார் 07.00 மணியளவில் என் அக்கா இறந்த காரியத்திற்காக தர்ப்பணம் செய்வதற்காக ஐயருக்கு சொல்லிவிட்டு மேலபனையூர் சென்றுவிட்டு திரும்பி நானும் சண்முகம் என்பவரும் என் தம்பியின் இருச்சக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கம்மங்குடி ஆர்ச் அருகே ONGC Quarters அருகே வெள்ளைக்கலர் அம்பாசிடர் கார் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அங்கும் இங்குமாக நிதானமில்லாமல் வேகமாக வந்தது. நாங்கள் சென்ற இருச்சக்கர வாகனத்தினை ஓட்டிவந்த சண்முகத்திடம் எதிரில் வந்த அம்பாசிடர் கார் அங்கும் இங்குமாக அலைந்துக்கொண்டு வருகிறது ஜாக்கிரதையாக ஓட்டு என்று சொல்லி முடித்தவுடன் அந்த கார் நாங்கள் வந்த வண்டியின் மீது மோதியது. எங்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு கால் எலும்பு முறிந்து 3 துண்டுகளாக தொங்கியது. சண்முகத்திற்கு இடுப்பிற்கு கீழ் பலத்த காயம் ஏற்பட்டது. காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. எனது மனைவிக்கும் விபத்தில் இறந்த சண்முகத்தின்

மகன் ஸ்ரீதருக்கும் தகவல சொல்லி அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து எங்களை ONGC ஆம்புலன்ஸ் மூலமாக என்னை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். சண்முகத்தினை மேல் சிகிச்சைக்காக மதுரை மீனாட்சிமிஷன் மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். மறுநாள் மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்தினை ஏற்படுத்திய அம்பாசிடர் காரை ஓட்டிவந்தவர் மேலபனையூரை சேர்ந்த குமார் என்று சொன்னார்கள். குமார் என்பவரை நான் பார்க்கவில்லை. என்னுடைய குடும்பத்தார்கள் அனைவருக்கும் எதிரியை தெரியும். விபத்தில் காயமடைந்த சண்முகம் 01.10.2020 ம் தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கம்மங்குடியிலிருந்து தஞ்சாவூர் செல்ல வேண்டுமென்றால் மன்னார்குடியை கடந்துதான் செல்லவேண்டும் என்றால் - சரிதான். மன்னார்குடியில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை உள்ளது என்றால் - சரிதான். முதலுதவி சிகிச்சைக்கு முதன்முதலில் மன்னார்குடி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் - சரிதான். அங்கு சண்முகத்திற்கும் எனக்கு முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அனுப்பி வைத்தார்கள் என்றால் - எனக்கு சிகிச்சை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. சண்முகத்தை வேனிலிருந்து அப்படியே அனுப்பிவிட்டார்கள் என்று மறுநாள் என்னிடம் சொன்னார்கள். எனக்கு மட்டும் மன்னார்குடி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்தபின்னர் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள் என்றால் - சரிதான்.

2. முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். நான் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை மருத்துவரிடம் வாகனத்தினை நான் ஓட்டியதாக சொன்னேனா என்றால் - இல்லை.

3. என்னை விபத்திற்கு மறுநாள், போலிசார் மீனாட்சி மருத்துவமனையில் விசாரித்த பிறகு எந்த தருணத்திலும் மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் - சரிதான். போலிசாரில் எந்த நிலை காவலர் என்னை விசாரித்தார்கள் என்றால் - 2 ஆண் காவலர்கள்.

4. விபத்து நடந்த நேரமானது இருட்டு நேரம் என்றால் - சரிதான். எதிர்திசையிலிருந்து வெளிச்சத்தோடு வாகனம் வந்தால் வெளிச்சம் தான் தெரியும் என்றும் வெளிச்சம் கடந்தபிறகு தான் வண்டியை பார்க்க முடியும் என்றால் - எதிர்திசையில் வந்தது வெள்ளை கலர் கார் மாதிரி தோன்றியது. விபத்து சம்மந்தப்பட்ட வாகனத்தின் எண் குறித்து என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் - மறுநாள் தான் வாகனத்தின் எண் குறித்து சொன்னார்கள்.

5. விபத்தில் இறந்துபோன சண்முகத்திற்கு கோவிட் பாசிட்டிவ் இருந்ததா என்றால் - இல்லை. கோவிட் பாசிட்டிவ் காரணமாக இறந்தவரை இந்த வழக்கில் தொடர்பு படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

6. முதல் விசாரணையில் எதிர்திசையில் வந்த வண்டி தாறுமாறாகவும் வேகமாகவும் வந்ததாக சொல்லப்படும் சங்கதி இந்த வழக்கிற்காக என்னால் ஜோடிக்கப்பட்டது என்றால் - சரியல்ல.

7. சண்முகத்தின் கவனக்குறைவாலும் எனது கவனக்குறைவாலும் ஏற்பட்ட விபத்து இது என்றால் - சரியல்ல. போலிசார் எங்கள் வாகனத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எந்த பகுதி மோதியது என்று விசாரித்தார்களா என்றால் - இல்லை.

8. பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT*
*Mannargudi*
*CC.No.318/2021 – P.W. 2 (LW3)*

| | |
|---|---|
| *Name* | ஸ்ரீதர் |
| *Father/Husband's Name* | சண்முகம் |
| *Village* | சேரி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 32 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 14.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். LNT தனியார் பைனான்ஸ் நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறேன்.

2. கடந்த 07.09.2020 ம் தேதியன்று மாலை சுமார் 07.00 மணியளவில் கோட்டூர் ஆர்ச் ONGC சைட் அருகே எனது அப்பாவும் பெரியப்பா திருநாவுக்கரசும் அப்பாவின் இருச்சக்கர வாகனமான Starcity வாகனத்தில் வாட்டாரிலிருந்து திரும்பி வந்துக்கொண்டிருந்தபோது எதிர்திசையில் வந்த அம்பாசிடர் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக என் அண்ணன் அன்பரசன் சொன்னார். சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது என் அப்பாவும் பெரியப்பா இருவரும் சுயநினைவின்றி கால்களில் காயங்களுடன் இருந்தார்கள். விபத்தினை ஏற்படுத்தியது ஒயிட் கலர் அம்பாசிடர் கார் ஆகும். அந்த காரை ஓட்டிவந்தவரை நான் பார்க்கவில்லை. அப்போது 108 ஆம்புலன்ஸ் வர லேட் ஆனதால் ONGC ஆம்புலன்ஸ் மூலமாக இருவரையும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு முதலுதவி செய்யாமல் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் பெரியப்பா மீனாட்சி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். எனது அப்பாவிற்கு முதலுதவி சிகிச்சை செய்துவிட்டு மேல்

சிகிச்சைக்காக மதுரை மீனாட்சிமிஷன் மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். அக்டோபர் 1ம் தேதியன்று என் அப்பா சிகிச்சை பலனின்றி மருத்துவமனையிலேயே இறந்துவிட்டார்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என் அப்பா கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என் அப்பாவினுடையதுதான். (**புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இந்த விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த விபத்தில் எனது தந்தைக்கு வலது தோள்பட்டையில் அடிப்பட்டிருந்ததா என்றால் - இல்லை. உண்மையில் வலது தோள்பட்டையில் அடிப்பட்டிருந்தால் சம்பவத்தன்று மறுநாளே வலது கையால் என் தந்தையால் கையொப்பமிட்டிருக்க முடியாது என்றால் - சரிதான்.

2. தற்போது உண்மை நிலையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. என் தந்தைக்கு கோவிட் பாசிட்டிவ் இருந்ததா என்றால் - சிகிச்சையிலிருந்தபோதுதான் கோவிட் தொற்று ஏற்பட்டது. சிகிச்சையிலிருந்தபோது கோவிட் தொற்று ஏற்பட்டதாக தற்போது வழக்கிற்காக என்னால் புகுத்தப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. என் அப்பாவின் இறப்பிற்கு முக்கிய காரணம் கோவிட் தொற்று தான் என்றால் - சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கில் பல்வேறு விபத்து பதிவேடுகள் மறைக்கப்பட்டுள்ளன என்றால் - சரியல்ல. விபத்தின்போது என் தந்தை மதுபோதையில் வாகனத்தினை இயக்கியதால் தான் இந்த விபத்து என்றால் - என் அப்பாவிற்கு குடிப்பழக்கம் கிடையாது.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.